இ.கு. (TG) – நி. வி. செ. வரிசை (FAME Series)
(இலக்கு குழு நிதி விழிப்புணர்வு செய்திகள்)







# பள்ளிக் குழந்தைகள்

# நிதிக் கல்வி

நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத் துறை, இந்திய ரிசர்வ் வங்கி

## செய்தி 1
தேவைகள் Vs ஆசைகள்

## செய்தி 2
வங்கியுடன் அறிமுகம்

## செய்தி 3
முதலீடு, காப்பீடு மற்றும் ஓய்வூதிய அடிப்படைகள்

## செய்தி 4
கல்விக் கடன்

## செய்தி 5
நிதியியல் துறை நெறியாளர்கள்



## தேவைகள் Vs ஆசைகள்

### கீழே உள்ள படங்களை பாருங்கள்

| தேவை | ஆசை | தேவை | ஆசை |
|---|---|---|---|
|  |  |  |  |

தேவைகள் மற்றும் ஆசைகள் ஆகியவற்றிற்கு இடையேயான வித்தியாசத்தை அறியும் திறனே பணத்தை வெற்றிகரமாக நிர்வகிப்பதன் முதல் படியாகும். மேலே உள்ள படங்களில் பார்ப்பது போல் தேவைகள் என்பவை அவசியமாக இருக்கவேண்டியவை, ஆனால், அதே சமயம் ஆசைகள் இருப்பதும் நல்லது. ஆசைகளை தள்ளிப்போட்டுப் பின்னர் பெறலாம். நாம் நமது ஆசைகளை அடையாளம் காணக் கற்றுக்கொண்டு, அவற்றைத் தள்ளிப்போடும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டால் நாம் நமது பெரும்பாலான நிதி இலக்குகளை அடைய முடியும்.

### வரவு செலவு திட்டமிடல் (பட்ஜெட்)

வருமானம் மற்றும் செலவுகளைச் சமன் செய்து, வரவைவிடச் செலவு எப்போதும் குறைவாக இருக்கும்படி உறுதிசெய்யும் கலையே வரவு செலவு திட்டமாகும் (பட்ஜெட்டிங்) எனப்படும். இதில் உபரியாகக் கிடைக்கும் தொகை ஏதேனும் இருக்குமானால், அதை வருங்காலத் தேவைகளுக்காக முதலீடு செய்யலாம்.

### வருமானம் Vs செலவுகள்







### கடன் வாங்குதல்

கடன் பெறும் வழிகள்

- நண்பர்கள்
- குடும்பம்
- வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்கள்
- வங்கிசாரா நிதிநிறுவனங்கள்

## செய்தி 2 - வங்கியுடன் அறிமுகம்

| | | |
|---|---|---|
| **வங்கிகள்**<br>வைப்புகளை ஏற்று கடன் கொடுக்கும் நிதி நிறுவனங்கள் | **சேமிப்பு மற்றும் நடப்புக் கணக்குகள்**<br>காசோலைப் புத்தகம், நிதி மாற்றம், கடன் அட்டை, UPI வசதிகளை வழங்கும் | **சேமிப்புக் கணக்கு**<br>• தனியாகவோ இணைந்தோ தொடங்கலாம்.<br>• கணக்கு நிலுவையின் மீது சிறிதளவு வட்டி வழங்கப்படும்.<br>• சில கணக்குகளில் குறைந்தபட்ச நிலுவை கட்டாயமாகத் தேவை.<br>**நடப்புக் கணக்கு**<br>• தனி நபர் வணிகம், கூட்டாண்மை நிறுவனங்கள், பொது மற்றும் தனியார் குழுமங்கள், அறக்கட்டளை நிறுவனங்கள், சங்கங்கள் போன்ற வர்த்தக அமைப்புகளுக்கு உரியது.<br>• வங்கிக் கணக்கில் பணம் நிலுவையிருக்கும்பட்சத்தில் பணம் எடுத்தல் மற்றும் போடுதல் ஆகிய பரிவர்த்தனைகளுக்குக் கட்டுப்பாடுகள் ஏதுமில்லை.<br>• கணக்கில் உள்ள நிலுவைத் தொகைக்கு வட்டி கிடையாது.<br>**மைனர்களுக்கு சேமிப்புக் கணக்கு**<br>• எந்த வயதுடைய மைனரும் தனது இயற்கையான அல்லது சட்டரீதியாக நியமிக்கப்பட்ட காப்பாளர் மூலம் சேமிப்புக் கணக்கைத் தொடங்க முடியும்.<br>• 10 வயது நிரம்பிய மைனர்கள் விருப்பப்பட்டால், சேமிப்புக் கணக்கைத் தொடங்கி தாங்களே பரிவர்த்தனைகளைச் செய்யலாம்.<br>• மைனர் மேஜரானவுடன், அதுவரையில் மைனராக இருந்த நபர் தனது கணக்கில் உள்ள நிலுவைத் தொகையை உறுதிப்படுத்தவேண்டும். அவரது (இயற்கையான அல்லது சட்டரீதியாக நியமிக்கப்பட்ட) காப்பாளர் அதுவரையில் கணக்கில் பரிவர்த்தனைகளைச் செய்து வந்திருந்தால், வங்கி புதிய செயல்பாட்டு அறிவுரைகள் மற்றும் தற்போதைய மேஜரின் மாதிரிக் கையெழுத்தையும் பெற்று நடைமுறை நோக்கங்களுக்காக பாதுகாத்து வைத்திட வேண்டும். |
| | **வைப்புகள்** | **தொடர் வைப்புகள்**<br>• தொடர்ச்சியான வைப்புத்தொகைகள் RDS என்று பிரபலமாக உள்ளன.<br>• ஒரு குறிப்பிட்ட தொகை ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட காலத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு மொத்தத் தொகையும் குறிப்பிட்ட கால இறுதியில் வட்டியுடன் திருப்பித்தரப்படும். இவ்வைப்புகளை ஆறு மாதங்கள் முதல் 120 மாதங்கள் வரையிலான கால அளவில் தொடங்கலாம்.<br>• ஒரு பெரிய தொகை சேமிக்க இயலாதவர்களுக்கு ஏற்றது, ஆனால் ஒவ்வொரு மாதமும் சிறிய அளவு சேமிக்க முடிந்தவர்களுக்கு ஏற்றது.<br>• முதிர்வு காலத்திற்கு முன்னர், இடையிடையே பணத்தை எடுக்கும் வசதி இல்லை. இருப்பினும், முதிர்வு காலத்திற்கு முன்பே வங்கி கணக்கை முடித்துப் பணம் பெறலாம். மாதத்திற்கான சேமிப்புத் தொகையை மாத இறுதிக்குள் செலுத்தத் தவறினால் அபராதம் செலுத்த வேண்டிவரும்.<br>**நிலையான வைப்புகள்**<br>• ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்கு 7 நாட்கள் முதல் 10 ஆண்டுகள் வரை தொடங்கலாம்.<br>• தொகை மற்றும் வைப்பு கால அளவைப் பொறுத்து வட்டி விகிதம் அமைந்திருக்கும்.<br>• பொதுவாக வட்டித் தொகை கால இறுதியில் மொத்தமாக வழங்கப்படுகிறது, இருப்பினும், குறிப்பிட்ட கால இடைவெளிகளில் வட்டி பெறும் வசதியும் உள்ளது.<br>• வைப்புதாரர் விரும்பினால், வைப்புத் தொகையை முதிர்ச்சி காலத்திற்கு முன்பே திரும்பப் பெறும் வசதியும் உள்ளது. |
| | **கடன்கள்** | **தனிநபர் கடன்**<br>இந்த கடன்கள் எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படலாம்.பொதுவாக மருத்துவ செலவுகள், திருமண செலவுகள், முதலிய அவசர தேவைகளுக்கான கடன்கள். இதுபோன்ற கடன்களுக்கு வட்டி விகிதம் அதிகம்<br>**வாகனக் கடன்**<br>இந்த கடன் வாகனம் வாங்கும் நோக்கத்திற்காக வழங்கப்படுகின்றன. வாகனம் வங்கியுடன் பிணையமாக இணைக்கப்பட்டுள்ளது. கடனைக் கட்டத் தவறினால், வங்கி வாகனத்தை தன்வசம் கையகப்படுத்தலாம்.<br>**வீட்டுக் கடன்**<br>எல்லோரும் தங்களுக்கு ஒரு சொந்த வீடு வேண்டும் என்னும் கனவைக் கொண்டுள்ளார்கள், ஆனால் வீடு வாங்குவதற்கு அதிகப்படியான பணம் தேவைப்படுகிறது. அந்தப் பணத்தை மக்களால் சமாளிக்க முடியாது. இந்த இடைவெளியை நிரப்ப, வங்கிகள் வீட்டுக் கடன்களை வழங்குகின்றன.<br>**கல்விக் கடன்**<br>வங்கிகள் மேற்படிப்பு படிக்க விரும்பும் மாணவர்களுக்கு கல்வி கடன் வழங்கும். அவன் / அவள் தனது படிப்பை முடித்து, சம்பாதிக்கத் தொடங்கியபின், கடனை திருப்பிச் செலுத்தலாம்.<br>**விவசாயக் கடன்கள்**<br>விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்ய, வங்கிகள் பல்வேறு வகையான கடன்களை வழங்குகின்றன.விவசாயிகள் தங்களுக்குத் தேவையான விதைகள், பூச்சிக்கொல்லிகள், டிராக்டர்கள் மற்றும் பிற உபகரணங்களை இந்த கடன்களைப் பயன்படுத்தி வாங்க முடியும். |

## செய்தி 3 -முதலீடு, காப்பீடு மற்றும் ஓய்வூதிய அடிப்படைகள்

முதலீடு என்பது ஒரு மரத்தை நடுவது போன்றது. ஒழுங்காகக் கண்காணித்து, அது வளரப் போதுமான காலத்தை அனுமதித்தால், நல்ல வருமானத்தை எதிர்பார்க்கலாம்.








பாரம்பரியமாக, முதலீட்டாளர்கள் தங்கம், நிலம் மற்றும் வீடு ஆகியவற்றில் முதலீடு செய்ய விரும்புகின்றனர் சமீபத்தில், பங்கு அல்லது பரஸ்பர நிதி போன்ற நிதி சொத்துக்களை தேர்ந்தெடுப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

### பங்குகள் மற்றும் பரஸ்பர நிதி

ஷேர்ஸ் / ஸ்டாக்ஸ் - ஷேர்ஸ் / ஸ்டாக்ஸ் ஒரு நிறுவனத்தில் முதலாளியாக சொந்தம் கொண்டாடும் உரிமையின் அளவைப் பிரதிபலிக்கின்றன. பங்குகளில் முதலீடு செய்பவர்களுக்கு இத்தகு உரிமை வழங்கப்படுகிறது. இதனால் முதலீட்டாளர்கள் வருடாந்திரப் பொது கூட்டத்தில் பங்கேற்கவும் மற்றும் வாக்களிக்கவும் உரிமை உண்டு. நிறுவனம் அதன் நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட இலாபங்களைப் பொறுத்து இந்த நிதிப்பொருட்கள் வருமானத்தை ஈட்டுகின்றன. இந்த வருமானம் நிறுவனத்தின் வர்த்தக இலாபத்தைப் பொறுத்து மாறுபடும். இந்த பொருட்கள் பல நன்மைகளை வழங்குகின்றன, ஆனால் முதலீட்டாளர்கள் முதலீடு செயவதற்கு முன்னதாகவே அந்நிறுவனத்தின் வியாபாரத்தை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். ஒரு நீண்ட கால முதலீட்டைத் திட்டமிடும் போது, இத்தகு நிதி உபகரணங்களில் முதலீடு செய்யலாம்.

எதிர்கால வருமானம் அல்லது சொத்துக்களின் மதிப்பை உயர்த்தும் எதிர்பார்ப்புடன் ஒரு சொத்து அல்லது சொத்துக்களில் நிதிஆதாரங்களை ஒதுக்கீடு செய்வதே ஒரு முதலீடு எனப்படும்.எடுத்துக்காட்டாக, நிலம், வணிக நிறுவனங்கள் முதலியவற்றில் முதலீடு செய்வது. அதிக எண்ணிக்கையிலான மக்கள் நேரடி வர்த்தகம் மூலம் அல்லது பரஸ்பர நிதியங்கள் மூலம் பங்குகளில் அல்லது பங்கு சந்தையில் முதலீடு செய்கின்றனர்.

பரஸ்பர நிதி நிறுவனம் என்பது பல முதலீட்டாளர்களிடமிருந்து சிறு அலகுகளில் முதலீட்டு உபகரணங்கள் (யூனிட்ஸ்)மூலம்நிதியைத் திரட்டி, அவர்கள் ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளபடி வெவ்வேறு முதலீடுகளில் முதலீடு செய்யும், இத்தகைய முதலீடுகள் பரந்துபட்டதாக வெவ்வேறு தொழில்கள் துறைகளில் இருக்கும். ஆகவே, நேரிடர் குறைவாக இருக்கும். பல்வகையாகப் பிரித்து முதலீடுகள் செய்யப்படுவதால், ஒட்டுமொத்த நேரிடர் குறைவாக இருக்கும். ஏனெனில், எல்லாத் துறை பங்குகளும் எல்லா நேரங்களிலும் ஒரே திசையில் ஒரே அளவில் நகர்வதில்லை. முதலீடு செய்த தொகைக்கேற்ப யூனிட்டுகள் வழங்கப்படும். முதலீட்டாளர்கள் யூனிட் ஹோல்டர்கள் என்று அழைக்கப்படுவார்கள்.

வெவ்வேறு வகையான முதலீட்டு நோக்கங்களுடன் பரஸ்பர நிதிகள் வெவ்வேறு முதலீட்டுத் திட்டங்களை அவ்வப்போது கொண்டுவரும். பொதுமக்களிடமிருந்து முதலீட்டு நிதியைத் திரட்டும் முன்பாக, பரஸ்பர நிதி நிறுவனங்கள் இந்திய பங்குகள் பரிவர்த்தனை வாரியத்திடம் (SEBI) பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும். பங்குகள் பரிவர்த்தனை வாரியம் பங்குப்பத்திர சந்தையை நெறிப்படுத்துகிறது.

### வளர்ச்சி / ஈவுப் பங்கு முதலீட்டுடன் கூடிய திட்டங்கள்

நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் மூலதனத்தின் மதிப்பை அதிகப்படுத்துவதே வளர்ச்சி நிதியின் நோக்கமாகும். இத்தகைய நிதித் திட்டங்களில், முதலீடுகளின் பெருமளவு ஈவுப்பங்குகளில் முதலீடு செய்யப்படும். இவற்றில் நேரிடர் ஓரளவிற்கு அதிகமாகவே இருக்கும்.

### வருவாய் / கடன் பத்திர முதலீட்டுத் திட்டங்கள்

முதலீட்டாளர்களுக்கு சீரான நிலையான வருவாய் கிடைக்க வேண்டும் என்பதே வருவாய் நிதி முதலீடுகளின் நோக்கமாகும். இத்திட்டங்களின் கீழ் நிலையான வருமானம் தரக்கூடிய, பாண்டுகள், கம்பெனி கடன் பத்திரங்கள் (டிபென்சர்கள்),அரசுப் பத்திரங்கள் மற்றும் பணச் சந்தை உபகரணங்களில் முதலீடுகள் செய்யப்படும். ஈவுப் பங்கு முதலீடுகளோடு ஒப்பிட்டால், இத்தகு நிதி முதலீடுகளில் நேரிடர் குறைவு.





இந்தியாவில் உள்ள இரண்டு முன்னோடி பங்குச் சந்தைகள் (தேசிய பங்குச் சந்தை, மும்பை பங்குச் சந்தை) மூலமாக ஏறத்தாழ 5,000 குழுமங்களின் பங்குகள் முதலீட்டிற்கு கிடைக்கின்றன. “இந்திய பரிவர்த்தனை வாரியத்தில்” பதிவு செய்யப்பட்ட தரகர்கள் மூலம் இந்த பங்கு பத்திரங்களை வாங்கலாம்.

## காப்பீடு பற்றிய அறிமுகம்



பேரிடர், நோய், விபத்து, மரணம் வயோதிகம் போன்ற காரணங்களால் ஒருவர் தனது வாழ்வாதாரத்திற்கு தேவையான வருமானம் ஈட்டுவது தடைபடலாம். அவற்றிலிருந்து பாதுகாப்பு அளித்து, வருமானம் தொடர்ந்து கிடைக்கும்படி செய்யும் ஏற்பாடே காப்பீடு.

காப்பீட்டு வர்த்தகம் என்பது உலகெங்கிலும் ஆயுள்காப்பீடு மற்றும் பொதுக்காப்பீடு என்று வகைப்-படுத்தப்பட்டுள்ளது. ஆயுள் காப்புறுதிக் கொள்கைகள் பாதுகாப்பு நலன்களுக்கான கொள்கைகள் எனக் கூறப்படுகின்றன. அவை பாதுகாப்பைத் தருபவை. வருமானம் ஈட்டும் ஒரு குடும்ப நபர் திடீரென இறக்க நேரிட்டால், அந்த எதிர்பாராத சூழலில் குடும்பத்திற்கு பாதுகாப்பளிக்கும் வழியாக இது பொதுவாக கருதப்படுகிறது.

பல்வேறு வகையான ஆயுள் காப்பீட்டு பாலிசிகள் உள்ளன. இவை சேமிப்பைப் பெருக்க ஒரு பொதுவான நீண்டகால முதலீட்டுத் திட்டமாக அமைகின்றன. வாழ்வின் வெவ்வேறு நிலைகளில் உள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யும் சேமிப்புடன் கூடிய முதலீட்டுத் திட்டமாக இவை இருக்கின்றன. பொதுக் காப்பீட்டுத் திட்டங்கள் சமுதாயத்திற்கு பல்வேறு பயன்களை அளிக்கின்றன. பொதுமக்களின் சொத்துகள் மற்றும் உடைமைகளுக்கு எதிர்பாராத மோசமான நிகழ்வுகளால் ஏற்படும் பல்வகையான நஷ்டங்கள், வணிகர்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் ஏற்படும் நஷ்டங்களிலிருந்தும் மக்களுக்கு நிதி சார்ந்த பாதுகாப்பை இத்தகு காப்பீட்டுத் திட்டங்கள் அளிக்கின்றன.

## ஓய்வூதிய அறிமுகம்



ஓய்வுகாலத் தேவைகளை கணக்கிடும் போது, ஆயுள் குறித்த எதிர்பார்ப்பு, பணவீக்கம், ஓய்வுபெறும் வயது ஆகியவை முக்கியமாக கவனத்தில் கொள்ளவேண்டிய விஷயங்களாகும். ஒவ்வொருவரின் சூழலைப் பொறுத்து இது மாறுபடும். ஒருவருக்கு ஓய்வுகாலத்தில் எவ்வளவு பணம் தேவாப்படும் என்பதை அறிந்துகொள்வது முக்கியம்.

நுகர்வோர் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைவாசி ஏறிக்கொண்டே போவது பணவீக்கம் என்று அழைக்கப்படும். இது ஒருவரின் ஓய்வுத் தேவைகளை இருவிதங்களில் பாதிக்கிறது. முதலில் பொருட்களின் விலைவாசி அதிகரிப்பதால், அதே அளவு பொருட்களை வருங்காலத்தில் வாங்குவதற்கு அதிகப் பணம் தேவை. இரண்டாவதாக விலைவாசி ஏறுவதால் சேமித்த பணமும் தன் மதிப்பை இழந்து கொண்டே வரும். ஓய்வூதிய நிதியை உருவாக்கும்போது இந்த இரண்டு காரணிகளையும் கருத்தில் எடுத்துக்கொள்வது அவசியம்.

### தேசிய ஓய்வூதியத் திட்டம் (NPS)

இந்திய அரசாங்கம் சீரான வருமானம் இல்லாதவர்களுக்கும் ஓய்வுகாலத்தில் நிதி சார்ந்த பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை அளிக்கும் பொருட்டு உருவாக்கிய திட்டமே தேசிய ஓய்வூதியத் திட்டமாகும். 18 வயது முதல் 60 வயது வரையுள்ள இந்தியக் குடிமக்கள் எவரும் தன் விருப்பம்போல் இத்திட்டத்தில் சேரலாம். ஒருவர் வேலை செய்து சம்பாதிக்கும் காலகட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் சீராகத் திட்டமிட்டு சேமிக்கலாம். ஒரு ஆண்டுக்கு குறைந்தபட்சம் ₹ 500 இத்திட்டத்தின் கீழ் சேர்ந்து சேமிக்க வேண்டும். 60-வது வயதில் ஒருவர் இத்திட்டத்தில் சேமித்ததில் ஒரு பங்கை மொத்தமாகப் பெறலாம். மீதித் தொகை மாதா மாதம் வழங்கப்படும். ஒரு குறிப்பிட்ட தொகை வரை NPS சேமிப்பிற்கு வரிவிலக்கு உண்டு.

## செய்தி 4 – கல்விக் கடன்

ஆண்டுதோறும் கல்விக் கடன் பிரபலமாகி வருகிறது. அதிக அளவில் மாணவர்கள் தங்களின் உயர்கல்விக்கான செலவுகளை கல்விக் கடன் மூலம் எதிர்கொள்ளும் வாய்ப்புகளை தேடி வருகிறார்கள். இதற்கான தேவை அதிகரித்து வருவதை உத்தேசித்து ஒரு புதிய 'போர்டல்' (தகவல்மேடை) உருவாக்கப்பட்டுள்ளது. இது கல்விக் கடன் குறித்த தகவல்களைத் தருவதோடு பல்வேறு வங்கிகளுக்கும் கல்விக் கடன் விண்ணப்பங்களை அனுப்பிட ஒற்றைச் சாளர வசதியையும் அளிக்கிறது.

வித்யாலட்சுமி

கல்விசார்ந்த குறிக்கோள்களைப் பூர்த்தி செய்தல்

www.vidyalakshmi.co.in

| | |
|---|---|
| படி ஒன்று | பதிவு |
| படி இரண்டு | ஒரு விண்ணப்பத்தை பூர்த்தி செய்தல் |
| படி மூன்று | பல்வேறு வங்கிகளுக்கு விண்ணப்பித்தல் |

கல்விக் கடன் நாடும் மாணவர்கள் நலனுக்காக இணையதளம் சார்ந்த தகவல் மேடையே வித்யாலட்சுமியாகும் www.vidyalakshmi.co.in இது பல்வேறு வங்கிகள் அளிக்கும் கல்விக் கடன் வசதிகள் குறித்த அனைத்து தகவல்களையும் அளிக்கும் ஒற்றைச் சாளர வசதியுடன் கூடிய தகவல் மேடையாகும். பொதுவான விண்ணப்பப் படிவம் ஒன்றின் மூலம் இம்மேடை வழியாக, ஒரு மாணவர் பல்வேறு வங்கிகளுக்கு கல்விக்கடனுக்காக விண்ணப்பிக்கலாம். மாணவர்கள் எந்த நேரத்திலும், எந்த இடத்தில் இருந்தும், கல்விக் கடனுக்கு விண்ணப்பிக்கலாம், விண்ணப்பத்தை சரி பார்க்கலாம். விண்ணப்பம் எந்தப் பரிசீலனை நிலையில் உள்ளது என்றும் தெரிந்து கொள்ளலாம்.

இந்த மேடையின் வாயிலாக 40 வங்கிகள் மாணவர்களுக்குக் கல்விக் கடன் அளித்திட பதிவு செய்துகொண்டுள்ளன. ஒரு லட்சம் மாணவர்களுக்கும் அதிகமானோர் இந்த தகவல் மேடையால் பயனடைந்துள்ளனர்.

கல்விக் கடன் குறித்த முக்கிய குறிப்பு

- இந்திய வங்கிகள் சங்கம் (IBA) வடிவமைத்துள்ள மாதிரி கல்விக் கடன் திட்டம் 2015-ன்வடி, இந்தியாவில் உயர்கல்விக்காக அதிகபட்சம் ₹ 10 லட்சமும், வெளிநாடுகளில் உயர்கல்வி பெற அதிகபட்சம் ₹ 20 லட்சமும் கல்விக் கடன் வழங்கப்படும்.
- கல்விக்கடன் தொகை ₹ 4 லட்சம் வரை வங்கியிலிருந்து பெற்றிட விளிம்புத் தொகை / பிணையம் தேவையில்லை.
- சமன் செய்யப்பட்ட மாதாந்திரத் தவணைகளில் 15 ஆண்டுகளில் எல்லா வகையான கல்விக் கடன்களும் திருப்பி செலுத்தப்படலாம்.
- படிப்பு முடிந்ததும், கடன் தீர்வைக் காலம் ஓராண்டு ஒத்திவைக்கப்படும். அதற்குப் பின் கடனை திருப்பிச் செலுத்தும் நடைமுறை ஆரம்பமாகும்.

செய்தி 5 – நிதியியல் நெறிமுறையாளர்கள்

## இந்திய ரிசர்வ் வங்கி

இந்திய ரிசர்வ் வங்கி நாட்டின் மைய வங்கி மற்றும் பணவியல் உயர்மட்ட வங்கியாகும். இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் 1934-ல் உள்ள ஷரத்துக்களின்படி இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 01, 1935 அன்று நிறுவப்பட்டது. ஆளுநர் தலைமையிலான மத்திய நிர்வாக மன்றக் குழுவினரிடம் இந்திய ரிசர்வ் வங்கியின் பொதுவான நடைமுறை மற்றும் கண்காணிப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த நிர்வாக மன்றத்திற்கு உதவியாக டெல்லி, கொல்கத்தா, சென்னை மற்றும் மும்பையில் நான்கு வட்டார நிர்வாக மன்றக் குழுக்கள் செயல்படுகின்றன.

இந்திய ரிசர்வ் வங்கியின் செயல்பாடுகள்

- பண வெளியீட்டாளர்-நாட்டில் பணத்தின் வடிவமைப்பு உற்பத்தி ஒட்டு மொத்த மேலாண்மை ஆகியவற்றில் இந்திய அரசுடன் இணைந்து இந்திய ரிசர்வ் வங்கி பொறுப்பேற்று நாட்டில் சுத்தமான நல்ல நோட்டுகள் போதுமான அளவில் கிடைப்பதை உறுதிசெய்யும் நோக்கத்துடன் செயல்படுகிறது.

- அரசாங்கத்தின் வங்கி -மத்திய அரசின் வங்கியாகவும், ஒப்பந்தம் வைத்துள்ள மாநில அரசுகளின் வங்கியாகவும் இது செயல்படுகிறது.

- வங்கிகளின் வங்கி - வங்கிகளுக்கு இடையே உள்ள பரஸ்பரப் பொறுப்புகளைத் தீர்க்கவும், பட்டுவாடா ஏற்பாடுகளுக்காகவும், வங்கிகளுக்கான நிதி பரிமாற்றத்திற்குரிய திறமையான வழிமுறைகளை வழங்குவதற்கும், சட்டப்பூர்வ இருப்பு, தேவைகளுக்காக வங்கிகளின் கணக்குகளை பராமரிப்பதற்கும், மற்றும் இறுதிக் கடன் அளிப்பவராக செயல்படவும் இந்திய ரிசர்வ் வங்கி வங்கிகளின் வங்கியாளராக செயல்படுகிறது.

- பணவியல் கொள்கை அதிகாரம்-நீடித்து நிலைத்து நிற்கும் பொருளாதார வளர்ச்சியை அடைந்திட விலைவாசியின் ஸ்திரத்தன்மை என்பதுஅடிப்படையான ஒரு முன்நிபந்தனை ஆகும்.வளர்ச்சி என்னும் லட்சியத்தை கருத்தில் கொண்டு செயல்படும் அதேவேளையில் விலைவாசியின் ஸ்திரத்தன்மையைப் பராமரிப்பது, பணவியல் கொள்கையின் முக்கியமான நோக்கமாகும்.

- மேம்பாட்டுப் பணிகளில் பங்கு -பொருளாதாரத்தின் உற்பத்தித் துறைகளுக்கு கடன் கிடைப்பதை உறுதி செய்வதை இந்திய ரிசர்வ் வங்கி நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கி, நாட்டின் நிதியியல் கட்டமைப்பை உருவாக்கிடும் வகையில் நிறுவனங்களை அமைக்கிறது. கட்டுப்படியாகும் விலையில் நிதியியல் சேவைகளைப் பெறுவதற்கான அணுகுமுறைகளை விரிவுபடுத்துகிறது. மேலும், நிதியியல் கல்வியை ஊக்குவிக்கிறது.

- வங்கிகளின் நெறிமுறையாளர் மற்றும் மேற்பார்வையாளர் -வங்கிகளின் நெறிமுறையாளர் மற்றும் மேற்பார்வையாளராகவும் இந்திய ரிசர்வ் வங்கி செயல்பட்டு, வைப்புதாரர்களின் நலனைப் பாதுகாக்கிறது. சீரான வளர்ச்சிக்கான வரைவுச் சட்டத்தை உறுதிப்படுத்துகிறது, வாடிக்கையாளர்களுக்கு நலன் விளைவிக்கும் வகையில் வங்கிகளின் செயல்பாடுகள் நடப்பதை உறுதி செய்கிறது. முன்னெச்சரிக்கை மற்றும் திருத்த நடவடிக்கைகள் மூலம், ஒட்டுமொத்த நிதியியல் ஸ்திரத்தன்மையைப் பராமரிக்கிறது.

- பட்டுவாடா மற்றும் தீர்வு முறைமையின் நெறிமுறையாளர் -நாட்டில் பாதுகாப்பான, நம்பகமான, திறமையான, எளிதில் அணுகக்கூடிய மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பணப்பரிவர்த்தனை, பட்டுவாடா முறைமையை, செயல்படுத்தி வளர்ப்பதில் இந்திய ரிசர்வ் வங்கி கவனம் செலுத்துகிறது.

- நிதியியல் ஸ்திரத்தன்மையைப் பராமரித்தல்-நிதியியல் முறைமையை தொடர்ந்து கண்காணிப்பதன் மூலம் இந்திய ரிசர்வ் வங்கி நாட்டின் நிதியியல் ஸ்திரத்தன்மையைப் பராமரிக்கிறது.

## இதர நிதியியல் நெறிமுறையாளர்கள்

### (SEBI) இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம்

இந்தியாவின் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் 1988-ல் ஒரு நிர்வாக அமைப்பாக நிறுவப்பட்டது. ஏப்ரல் 12, 1992-ல், SEBI சட்டம் 1992 ன் விதிமுறைகளின் படி அது ஒரு சட்டரீதியாகத் தன்னாட்சி அமைப்பாக ஆக்கப்பட்டது. பங்குகள் சந்தையில் முதலீடு செய்பவர்களின் நலனைப் பாதுகாப்பதை முக்கியமான ஆணையாகக் கொண்டு SEBI நிறுவப்பட்டது. பங்குப் பத்திரச் சந்தையின் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதும், அதன் நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதும் SEBI-ன் கட்டளைப் பணியாகும். இதன் தலைமை அலுவலகம் மும்பையில் உள்ளது.

### (IRDAI) இந்தியக் காப்பீட்டு நெறிமுறை மற்றும் மேம்பாட்டு வாரியம்

இந்தியக் காப்பீட்டு நெறிமுறை மற்றும் மேம்பாட்டு வாரியம் (IRDAI) என்பது இந்தியாவில் காப்பீட்டுத் துறையை மேம்படுத்தி, நெறிப்படுத்தும் கோட்பாடுடைய சட்டரீதியான அமைப்பாகும். இது IRDAI சட்டம் 1999 - ன் விதிமுறைகளின் படி உருவாக்கப்பட்டுள்ளது. IRDAI-ன் தலைமை அலுவலகம் ஹைதராபாத்தில் உள்ளது.

### இதர நிதித் துறை நெறிமுறையாளர்கள்

இந்தியாவின் நிதியியல் முறைமை என்பது காப்பீடு, மூலதனச் சந்தை மற்றும் ஓய்வூதிய நிதிப் பிரிவுகளில் தனிப்பட்ட நெறிமுறையாளர்களால் நெறிப்படுத்தப்படுகிறது.

### (PFRDA) ஓய்வூதிய நிதி நெறிமுறை மற்றும் மேம்பாட்டு வாரியம்

ஓய்வூதிய நிதி நெறிமுறை மற்றும் மேம்பாட்டு வாரியம் ஆகஸ்ட் 23, 2003 அன்று இந்திய அரசால் நிறுவப்பட்டது. அக்டோபர் 10, 2003 தேதியிட்ட செயலாணையின் மூலம் இந்திய அரசு PFRDA ஓய்வூதியத் துறையின் ஒரு நெறிமுறையாளராகச் செயல்பட கட்டளை விதித்தது. இந்தியாவில் ஓய்வூதியத் துறையை மேம்படுத்துவதும் நெறிமுறைப்படுத்துவதும் PFRDA-ன் கட்டளைப் பணியாகும். PFRDA சட்டம்2013-ன்படி இதற்கு சட்டப்பூர்வமான அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. PFRDA-ன் தலைமை அலுவலகம் புது தில்லியில் உள்ளது.

## குறித்த இலக்குக்கு உரிய நிதியியல் கல்விப் பாடங்கள்

இந்திய ரிசர்வ் வங்கியின் செயல் இயக்குநர் திரு.தீபக் மொஹந்தி அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட "அனைவரையும் உள்ளடக்கிய நிதியியலுக்கான இடைக்கால பாதை" குறித்த குழுவின் பரிந்துரைகளில் ஒன்று பின்வருமாறு - "வெவ்வேறு பிரிவினருக்கு வெவ்வேறுவிதமான நிதியியல் கல்வி தேவைப்படுவதனால், நிதியியல் கல்வியைப் பொறுத்தவரை, "ஒரே அளவு அனைவருக்கும் பொருந்தும்" என்ற கொள்கையின் அடிப்படையிலான அணுகுமுறை சிறந்தது அல்ல. இதன் விளைவாக, ஒவ்வொரு இலக்கு குழுவினருக்கும் ஏற்ற வகையில், நிதிக் கல்விப் பாடங்களின் கருத்துக்கள் தனிப்பட்ட முறையில் வடிவமைக்கப்பட வேண்டும்."

விவசாயிகள், சிறு தொழிலதிபர்கள், பள்ளி குழந்தைகள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் மூத்த குடிமக்கள் ஆகிய ஐந்து வெவ்வேறு இலக்குக் குழுக்களுக்கு ஏற்ற வகையில் நிதியியல்கல்விப் பாடத்தை இந்திய ரிசர்வ் வங்கியின் நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத்துறை தனித்தனியே வடிவமைத்துத் தந்துள்ளது. நிதியியல் கல்வி சார்ந்து தனித்தனியே வடிவமைக்கப்பட்ட ஐந்து புத்தகங்களின் வரிசையில் இந்த புத்தகம் ஒன்றாகும்.

### பொறுப்புத் துறப்பு

இந்த புத்தகத்தை வாசிப்பவர் நிதியியல் கல்வி அறிவு பெறவேண்டும் என்கின்ற ஒரு உண்மையான நோக்கத்துடன் படிக்கவும், கற்பிக்கவும் ஏதுவானதாக இந்தப் புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட நிதியியல் பொருள் / பொருட்கள், அல்லது சேவை / சேவைகள் தொடர்பாக முடிவெடுப்பதில் தாக்கத்தை ஏற்படுத்துவது இதன் நோக்கம் அல்ல.

பதிப்புரிமை
முதல் பதிப்பு - ஏப்ரல் 2018
மூல ஆதாரம் தெரிவிக்கப்படும்பட்சத்தில், இதிலுள்ள கருத்துக்களை எடுத்துக் கையாள அனுமதியளிக்கப்படும்.

எழுதி வெளியிட்டவர்கள் -
நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத் துறை
இந்திய ரிசர்வ் வங்கி
10-வது தளம், மைய அலுவலகக் கட்டிடம்
ஷாஹித் பகத் சிங் மார்க்
கோட்டை
மும்பை

அங்கீகாரங்கள்
வடிவமைப்பு - கௌசிக் ராமச்சந்திரன்

நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத்துறை,
இந்திய ரிசர்வ் வங்கி,
10-வது தளம், மைய அலுவலகக் கட்டிடம், மும்பை, இந்தியா